**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 134/2022**

**பி.வா.சா.1 – பழனிசாமி கவுண்டர்**

**<u>15–09–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நாச்சியப்ப கவுண்டரின் சொந்த ஊர் என்றால் பெருமனையாகும். முத்தனம்பாளையம் கிராமம் திருப்பூர் தாலுக்காவில் மேற்படி ஊர் உள்ளது. அவருக்கு ஆறு ஆண் மகன்கள் வாரிசுகள். அவர்களது பெயர் பொன்னுசாமி, சின்னசாமி, அருணாச்சலம், பழனிச்சாமி, ராமசாமி, கிட்டுசாமி என்றால் சரிதான். பாப்பம்மாள் மற்றும் சுப்பாத்தாள் மேற்படி ஆறு ஆண் வாரிசுகளுக்கு மூத்தவர்களா அல்லது இளையவர்களா என்றால் தெரியாது. பாப்பம்மாள் மூத்தவரா சுப்பாத்தாள் மூத்தவரா என்றால் நான் ஊரில் வசிக்காததால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் எனது மாமா விட்டில் கண்டியன்கோவிலில் வழந்தேன். அருணாச்சலக் கவண்டர் எனது சித்தப்பா என்றால் சரிதான். அவரது மகன் சுப்பிரமணி என்றால் தெரியாது.

2. அருணாச்சலத்திற்கு ஒரு மகன் வாரிசு என்றால் தெரியாது. மற்றொரு சித்தப்பாவுக்கு எவ்வளவு வாரிசுகள் என்று தெரியாது. எனக்கு உறவு முறைபற்றி தெரியாது. எங்கள் வீட்டில் எனது அண்ணன் லோகநாதன். மற்றும் நான் வாரிசுகள். லோகநாதன் இறந்துவிட்டார். அவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் வாரிசுகள். அவரது மனைவி பெயர் வளர்மதி, மகள் பெயர் யசோதா, மகன் பெயர் ஜனார்த்தனன். எனது அப்பாவின் நேர் இளையவர் சின்னசாமி கவுண்டர் என்றால் தெரியாது. சின்னசாமி கவுண்டருக்கு முத்துலச்சுமி, ருக்மணி, சகுந்தலா மற்றும் செல்வி வாரிசுகள் என்றால் தெரியாது. அருணச்சலக்கவுண்டரின் மனைவி முத்தம்மாள், அவரது மகன் சுப்பிரமணி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் மனைவி ராமாத்தாள், மகள் பேபி, மகன் கருணாமூர்த்தி, கருணாமூர்த்தி இறந்துவிட்டதால் மனைவி பூங்கொடி, மகன் தேவேந்திரன் வாரிசுகள் என்றால் தெரியாது. அருணச்சலக்கவுண்டரின் மனைவு முத்தம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் தெரியாது.

3. அருணாச்சலக்கவுண்டரின் மகன் சுப்பிரமணிக்கு சுப்பாத்தாளின் மகளைதான் திருமணம் செய்துவைத்துள்ளார்கள் என்றும், அந்த திருமணத்திற்கு நான் சென்றுள்ளேன் என்றால் தெரியாது. அவர்தான் ராமாத்தாள் என்றால் தெரியாது. ராமாத்தாள் அருணச்சலக்கவுண்டரின் வீட்டிற்கு மருமகளாக சென்றதால் வாரிசு நடவடிக்கையில் கலந்துகொள்ளாததால் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் தெரியாது. மற்றொரு சித்தப்பா பழனிசாமி கவுண்டர் அவரது மனைவி மற்றொரு முத்தம்மாள், மகன் வேலுச்சாமி, மகள் காந்திமதி என்றால் சரிதான். தற்போது தான் அதுவும் தெரியும். கிட்டுசாமியின் மனைவி அங்காத்தால், மகன்கள் கோபால்சாமி, குமாரசாமி, மகள் ராதாமணி என்றால் தெரியாது.

4. மற்றொரு சித்தப்பா ராமசாமி கவுண்டரின் மனைவி கோவிந்தம்மாள், மகன் கமலநாதன், மகள்கள் சரோஜினி, ஈஸ்வரி, வள்ளியாத்தாள் என்றால் தெரியாது. ஈஸ்வரி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் சித்தரா , நித்யா மற்றும் தனசேகர் என்றால் தெரியாது. நாச்சியப்ப கவுண்டருக்கு பாப்பம்மாள் மற்றும் சுப்பாத்தாள் மகள்கள் என்றும் பாப்பம்மாளின் வாரிசுகள் கணவர் பழனிச்சாமி, மகன்கள் அப்புக்குட்டி, கருப்புசாமி மற்றும் சண்முகம் மகள் புஷ்பாத்தாள் என்றால் தெரியாது. மகன் அப்புக்குட்டி இறந்துவிட்டதால் அவரது மனைவி சரஸ்வதி மகன் தண்டபாணி, மகள் விஜயலச்சுமி வாரிசுகள் என்றால் தெரியாது.

5. சுப்பாத்தாள் கணவர் சென்னிமலைக் கவுண்டர் என்றும் அவர் இறந்துவிட்டார் என்றும், அவர்களுக்கு மகள்கள் ராமாத்தாள், புஷ்பாத்தாள், சாரதாம்பாள், மகன்கள் விஸ்வநாதன், மணி, பழனிச்சாமி வாரிசுகள் என்றால் தெரியாது. கிட்டுசாமி வகைரா அ.வ எண். 349/2011 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் தெரியாது. பாகப்பிரிவினை செய்த சொத்துக்களை மற்றவர்கள் விற்றுவிட்டார்கள் நான் வைத்துள்ளேன். மற்றவர்கள் யாருக்கு விற்றார்கள் என்றால் தினேஷ்குமாருக்கு விற்றதாக கேள்விப்பட்டேன். அந்த

பாகப்பிரிவினை வழக்கில் சொத்தை வாங்கியவர்களும் தரப்பினர்கள் என்றால் தெரியாது.

6. அந்த வழக்கில் நாச்சியப்ப கவுண்டரின் இரண்டு மகள்களான வாதிகளின் முன்னோரான பாப்பம்மாள் மற்றும் சுப்பாத்தாள் நாச்சியப்ப கவுண்டரின் மகள்கள் என்று நாங்கள் நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டு தற்போது மறுக்கிறோம் என்றால் சரியல்ல. பாப்பம்மாள் மற்றும் சுப்பாத்தாள் நாச்சியப்ப கவுண்டரின் பெண் வாரிசுகள் என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர்களை எனது அத்தைகள் என்று ஒப்புக்கொண்டால் மற்ற வாரிசுகளின் விபரத்தை கூற வேண்டும் என்பதால் தான் உறவுமுறை பற்றி தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருடன் உடன் பிறந்து சாகோதரர்களை தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிகள் சுப்பாத்தாள் மற்றும் பாப்பம்மாளின் வாரிசுகள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றும் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணையை 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது)

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.